(7) 1981 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் நகராட்சி மன்றத் (தனி அதிகாரியை நியமித்தல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 27/1981).

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே,

" சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1981 ஆம் ஆண்டு, கோயம்புத்தூர் நகராட்சி மன்றத் (தனி அதிகாரியை நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 27/1981) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை—

" சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1981 ஆம் ஆண்டு, கோயம்புத்தூர் நகராட்சி மன்றத் (தனி அதிகாரியை நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 27/1981) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்டமுன்வடிவு, பிரிவுவாரியாக ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவு 2.

THIRU K. RAMAMOORTHY : Sir, I move the following amendment :—

" In clause 2, sub-clause (1) for the words 'for a period of six years' *innsert* the words' till such time and date the State Government feel convenient to hold elections' ".

திரு. சோ. ஆறுமுகம் : திருத்தத்தை வழிமொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. க. இராமமூர்த்தி அவர்கள் திருத்தத்தை வலியுறுத்துகிறாரா, திரும்பப் பெறுகிறாரா ?

@ 491 ஆம் பக்கத்தில் இணைப்பு IXஆக அச்சிடப்பட்டுள்ளது.

திரு. க. இராமமூர்த்தி : தலைவரவர்களே, என்னுடைய திருத்தத்தை வலியுறுத்தவில்லை.

திருத்தம், அவையின் அனுமதியுடன், திரும்பப் பெறப்பட்டது.

பிரிவு 2, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1981 ஆம் ஆண்டு, கோயம்புத்தூர் நகராட்சி மன்றத் (தனி அதிகாரியை நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 27/1981) நிறைவேற்றப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1981 ஆம் ஆண்டு, கோயம்புத்தூர் நகராட்சி மன்றத் (தனி அதிகாரியை நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 27/1981) நிறைவேற்றப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(8) 1981 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 28/1981).

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1981 ஆம் ஆண்டு, சென்னை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 28/1981) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

@ 492 ஆம் பக்கத்தில் இணைப்பு X ஆக அச்சிடப்பட்டுள்ளது.